தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 15

2010 ஏப்ரல் 28, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு."

விளையாட்டாகக்கூட ஒருவரை இகழ்ந்து பேசுவதால் கேடு உண்டாகும். அறிவு முதிர்ந்தவர்கள், பகைவரிடமும் பண்பு கெடாமல் நடந்துகொள்வார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

111—

சீரமைத்தல்

***17898—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 28

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சி, கரட்டூர் பள்ளிக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். 2010-2011 ஆம் ஆண்டில் தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சி, கரட்டூர் பள்ளிக் கட்டடத்தைச் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், அவையில் இல்லை. மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தைச் சார்ந்த மானத்தாள் ஊராட்சி ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகளெல்லாம் கரட்டூரில் இருக்கின்ற பள்ளிக்குச் சென்றுதான் படிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கின்ற சிறிய சிறிய ஊர்களில் படிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குப் போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாமல், பற்றாக்குறையாக இருக்கிறது. கட்டட வசதி மற்றும் இதர வசதிகள் இல்லாத காரணத்தால், தனியார் பள்ளிகளுக்கும், வெளியூரில் இருக்கின்ற பள்ளிகளுக்கும் சென்று படிக்கக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தால், கிராமப்புற குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக, அங்கிருக்கின்ற பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டி, கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்து, கல்வி வசதிக்குத் தேவையான ஏற்பாடுகளையெல்லாம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரட்டூர் தொடக்கப் பள்ளியிலே தற்போது சிமென்ட் அட்டைக் கூரைக் கட்டடம் மட்டுமே உள்ளது.

2010 ஏப்ரல் 28]

இந்த ஊராட்சியிலே 2010-2011 ஆம் ஆண்டிலே அனைத்து அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்த இருக்கின்ற காரணத்தால், அந்தத் திட்டத்திலே இதுவும் சேர்த்துக்கொள்ளப்பட்டு, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் இந்தப் பள்ளிகளின் சிமெண்ட் அட்டைக் கூரைக் கட்டடத்தை, ஓட்டுக் கட்டடமாக மாற்றவும், பழுதுகளை நீக்கவுமான இந்தப் பணிகள் ரூ.2,50,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன். (குறுக்கிடு) No.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் பழுதடைந்துள்ள நிலையிலிருந்த எத்தனை பள்ளிகள் சீரமைக்கப்பட்டுள்ளன; சீரமைக்கப்பட்டதற்கு செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அடங்கியிருக்கின்ற தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மேம்பாட்டுப் பணிகள் முடிந்த நிலையில் இருக்கக்கூடிய வகையில் சொல்லவேண்டுமென்றால், 2007-2008-லே 328 தொடக்கப் பள்ளிகளும், 92 நடுநிலைப் பள்ளிகளும், 2008-2009 ஆம் ஆண்டிலே 151 தொடக்கப் பள்ளிகளும், 39 நடுநிலைப் பள்ளிகளும் மற்றும் 2009-2010 ஆம் ஆண்டிலே 121 தொடக்கப் பள்ளிகளும், 32 நடுநிலைப் பள்ளிகளும், ஆக மொத்தமாக 1,026 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு 13 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அந்தச் சீரமைப்புப் பணிகளெல்லாம் முழுமை பெற்றிருக்கின்றன. அதேபோல, மூன்றாம் நிலை நகராட்சி மற்றும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, சேலம் மாவட்டத்தில் 13 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 பள்ளிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிக் கட்டடங்கள் சீரமைக்கப்படவுள்ளன; எவ்வளவுத் தொகை செலவழிக்கப்படவுள்ளது; என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கக்கூடிய கிராம ஊரகப் பகுதிகளில் அமைந்திருக்கக்கூடிய 5,000 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்திருக்கக்கூடிய 500 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் ரூபாய் 85 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படவுள்ளன. என்னென்ன பணிகள் இதிலே நடைபெறுகின்றன என்று கேட்டால் இந்தப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சிமெண்ட் அட்டைக் கூரை, மங்களூர் ஓட்டுக் கூரையாக மாற்றி அமைக்கப்படுகிறது; மங்களூர் ஓட்டுக் கூரை அமைக்கப்படும்போது, மரச் சட்டங்களுக்குப் பதிலாக இரும்புச் சட்டங்கள் மற்றும் ரீப்பர்கள் புதிதாக அமைக்கப்படுகின்றன; பழுதடைந்த மங்களூர் ஓட்டுக் கூரைகள் பழுதுநீக்கம் செய்யப்படுகின்றன; தரை, கூரை, சுற்றுச் சுவர் பழுதுநீக்கும் பணிகளும் இந்தத் திட்டத்திலே மேற்கொள்ளப்படுகின்றன; பழுதடைந்த ஜன்னல்கள் மற்றும் கதவுகள் மாற்றியமைக்கப்படுகின்றன; அல்லது, பழுதுநீக்கம் செய்யப்படுகின்றன; சுண்ணாம்புப் பூச்சு மற்றும் வண்ணப் பூச்சுகளும் இந்தத் திட்டத்தின்மூலமாக நிறைவேற்றப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.